REPORTING SECTION

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தத் தகவல் இல்லை. டிஸ்ட்ரிக்ட் போர்டு ஸ்கூல்களையும் கவர்ன்மெண்ட் ஸ்கூல்களையும் இண்டக்ரேட் செய்வதிலே கொஞ்சம் பிரச்னைகள் இருக்கின்றன. இருதரப்பாரையும் கலந்தாலோசித்து கல்வி டைரக்டர் அவர்கள் இதுபற்றி ஆராய்ந்து வருகிறார்கள். அவர்களுடைய அறிக்கை வந்தவுடன் பரிசீலனை செய்யப்படும்.

திரு. கே. விநாயகம் : யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் என்ன சிபாரிசு செய்ததோ அதை அரசாங்கம் பல இடங்களிலே அமலுக்குக் கொண்டுவரவில்லை என்ற புகார் வந்திருக்கிறது. டிபார்ட்மெண்ட் ஹெட்டுக்குக் கீழே நான்கு அஸிஸ்டெண்ட்கள் இருந்தால் கிரேடு 1 சேலரி கொடுக்கப்படுகிறது. அதேமாதிரி தமிழுக்கு ஊக்கம் தரவேண்டுமென்று சொல்லுகின்றபொழுது ஹெட் ஆப் தி டிபார்டுமெண்ட் தமிழாசிரியராக இருந்தால் அவருக்குக் கீழே நான்கு பேர்கள் இருந்தால்தான் கிரேடு 1 சேலரி கொடுக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆனால் மற்றப் பாடங்களிலே பிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி, ஜியாக்ரபி இந்த டிபார்ட்மெண்ட் ஹெட்டுக்குக் கீழே இரண்டு பேர்கள் இருந்தால்கூட, அல்லது ஒருவர் இருந்தாலேகூட அம்மாதிரி தரப்படுகிறது. எனவே தமிழுக்கு ஊக்கம் கொடுக்கிற சர்க்கார் ஏன் அதை அமல்படுத்தவில்லை. இனிமேலாவது அதைச் செய்வார்களா ? குறிப்பாக அப்படிப்பட்ட இன்ஸ்டன்ஸ் பிரசிடென்சி காலேஜிலே இருக்கிறது. அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் இப்பொழுதாவது தமிழில் அக்கறை காட்டுவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் சொன்னதை நாம் அப்படியே ஒப்புக்கொண்டோம். ஆனால் இண்டர்ப்ரடேஷன் ஆப் ரூல்ஸில் ஏதாவது கஷ்டம் இருக்கலாம். அதை இந்த அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

பெண்கள் தொழிற்பயிற்சி.

*242 வினா—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா— முற்கல் 9-30

பெண்கள் தொழிற் கல்வியைப்பற்றி இந்த அரசு மேற்கொண்டுள்ள திட்டங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இம் மாநிலத்தில் தற்போது பெண்களுக்கான பல தொழிற் பயிற்சிப் பள்ளிகள் (பாலிடெக்னிக்குகள்) மூன்று உள்ளன. மின் இயல், கட்டிடப் பொறியியல், இயந்திரப் பொறியியல், வாணிபம் குறித்த பயிற்சி, ஆடை வடிவமைப்பு துறை, ஆடைகள் தயாரித்தல், ஆகியவற்றில் "டிப்ளோமா" அளவில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தற்போதுள்ள பெண்கள் பாலிடெக்னிக்குகள் மூன்றில் புதிய பயிற்சிகளைச் சேர்த்துப் பயிற்சிகளைப் பல தரப்பட்டவையாக்கக் கருதியுள்ளது.

திருமதி வி.ப. பழனியம்மாள் : அப்படி புதிய பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பிக்கப்படும்போது கோவை மாவட்டத்தில் ஒரு பள்ளி ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : கோவை மாவட்டம் மிகுந்த அளவு முன்னேறியுள்ள மாவட்டம். தொழிற் கல்லூரியிலே, அவர்கள்தான் தலைசிறந்து விளங்குகிறார்கள்.

திரு கே. போஜன் : அமைச்சர் அவர்களுடைய பதிலில் பெண்கள் தொழிற் பயிற்சிக் கல்லூரிகள் ஏற்கனவே சென்னை மாநிலத்தில் மூன்று இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அவை எந்தெந்த மாவட்டங்களில் இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சென்னை, மதுரை, கோயம்புத்தூர்

திரு. இல. பலராமன் : இதுபோன்ற பெண்கள் தொழிற் கல்லூரிகளில் "ஆஃப்டர் கேர் ஹோம்"-ல் இருக்கின்ற பெண்களுக்கு பயிற்சி அளிக்கத் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : "ஆஃப்டர் கேர் ஹோமில்" சில சந்தர்ப்ப சூழ்நிலையினால் அப்பேர்ப்பட்ட பெண்கள் இருக்கிறார்கள். அவர்கள் சேர்ந்து பயிற்சி பெற விரும்பினால் அரசாங்கம் பரிசீலிக்கும்.

திரு கொ. இர. ஞானசம்பந்தன் : இந்த நிறுவனங்களிலே எத்தனை பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 250.

திரு கே. என். குமாரசாமி : கோவை மாவட்டத்தைப் பற்றி எதை யெடுத்தாலும் முன்னேறிய ஜில்லா என்று சொல்லி அங்கு ஏற்படக்கூடிய அபிவிருத்திகளைத் தடுத்து நிறுத்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு அவ்வளவு பெரிய சந்தேகம் ஏற்பட வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கனவே உள்ள மூன்று பயிற்சிப் பள்ளிகளில் ஒன்று கோவையில் இருக்கிறது. மேலும் தொழிற் கல்வியைப் பொறுத்தவரையில் சீரான கல்வி, சிறப்பான கல்வி அங்கேதான் தரப்படுகிறது. பொறியியல் கல்லூரியில் தமிழிலேகூட அங்கு கற்றுக் கொடுக்கப்படுகிறது. கோவை மாவட்டம் எந்தக் காலத்திலும் பின்தங்காது.

திரு வ. ஜார்ஜ் : பெண்கள் பாலிடெக்னிக்குகளில் பயிற்சிபெற்றவர்கள் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு ஏதேனும் செயற்குறிப்பு அரசாங்கத்தில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஐந்தாண்டுத் திட்டம் ஒத்திப் போடப் பட்டதின் காரணமாக பாலிடெக்னிக்கில் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை கிடைக்க முடியாத நிலைமை இருந்தது. அதற்காக இடங்களைத் குறைத்துவிட வேண்டுமென்று மத்திய அரசாங்கம் கூறியது. தற்போது ஐந்தாண்டுத் திட்டத்தை தொடங்குவதற்கான வாய்ப்புகள் உருவாகி யிருப்பதால் நல்ல சூழ்நிலை உருவாக முடியும்.

Children's theatre for Tirunelveli Town.

* 243 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) whether the attention of the Government has been drawn to the resolution passed by the Tirunelveli Municipal Council to have a children's theatre within its local limits; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) (இ) தற்போது கட்டப் பட்டு வரும் ராஜாஜி நூற்றாண்டு விழா மண்டபத்தில் பாலர் அரங்கம் ஒன்று அமைப்பதெனத் திருநெல்வேலி நகராட்சி மன்றம் முடிவு செய் துள்ளது. பாலர் அரங்கத்தை அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்குமாறு, திருநெல்வேலி மாவட்டக் கலெக்டரை, நகராட்சி ஆணையாளர் வேண்டி யுள்ளார்.

தாந்தோணி ஊராட்சி ஒன்றியம்

* 244 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம், தாந்தோணி ஊராட்சி ஒன்றியம் கடந்த 6—5—1967 முதல் 15—2—1968-ஆம் தேதி வரை எத்தனை தீர்மானங் கள் போட்டது ?

(இ) அவைகளில் நிறைவேற்றப்பட்டவை எத்தனை ?